1990 ஏப்ரல் 21]

82 பேருந்துகள் தற்போது விருத்தாசலம் பணி மனையிலே யிருந்து இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இடவசதிக் குறைவாக இருந்தால், தேவைப்பட்டால் நகரத்திற்கு அப் பாலேயும் கூடுதலாக இடம் வாங்குவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது கையகப்படுத்தப்பட்ட இடம் நீதிமன்றத்திலே இருக்கிறது. அந்த இடத்திற்கு உரிமை யானவர் அவர் இல்லை. அது கோயிலுக்கு, ஒரு தர்ம ஸ்தாப னத்திற்கு உள்ள இடம். அது கூட தனிப்பட்ட முறையிலே வழக்கிலே இருக்கிறது. அந்த இடத்திலே நாம் இந்த பஸ் நிறுத்துவதற்கு இடத்தைப் பெறுவதை விட ஊருக்கு வெளிப் புறத்திலே, நகரத்திற்கு வெளிப் புறத்திலே நல்ல தகுதியான பெரிய இடத்தை வாங்கி அங்கே இந்த ஏற்பாட்டைச் செய் வதற்கு அமைச்சரவர்கள் இந்த ஆண்டு முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த நில எடுப்பு சம்பந்தமாக நஷ்டயீட்டோடு சேர்த்து வட்டி யும் செலுத்த வேண்டுமென்றுதான் நீதிமன்றம் உத்தரவிட்டு, 1,59,230 ரூபாய் என்று நில எடுப்பு அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்டது. கடைசியிலே அது உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, வட்டியெல்லாம் சேர்த்துச் செலுத்த வேண்டுமென்று, கடைசியாக 3,10,500 ரூபாய் என்கின்ற அளவிலே கொண்டு போய் நிறுத்தி, அதற்குண்டான நஷ்டயீட்டுத் தொகையும் கட்டப்பட்டாகி விட்டது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலை யில் அந்த நில எடுப்பை விட முடியுமா என்பதைப் பற்றி அரசு யோசித்துதான் பதில் சொல்ல வேண்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கம்பன் ரயில ராமேஸ்வரம் வரை விடுதல்.

***7443—டாக்டர் எஸ். சுந்தரராஜ்** : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கம்பன் ரயிலை ராமேஸ்வரம் வரை விட மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மானாமதுரை வரை செல்லும் கம்பன் இரயில் சென்னை- இராமேஸ்வரம் இரயிலைத் தொடர்ந்தே இயக்கப்பட்டு வருவ தால் கம்பன் இரயிலை இராமேஸ்வரம் வரை விட மத்திய அரசினைக் கோர அவசியமில்லையென கருதப்படுகிறது.

[1990 ஏப்ரல் 21

9-50 மணி

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடநாட்டு பயணிகள் ஆயிரக்கணக்கில் இராமேஸ்வரம் வந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டு ரெயில் மூலம் திரும்புவதற்குக் காத்து இருக்கிறார்கள். இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ், சேது எக்ஸ்பிரஸ் இரண்டும் மாலையில்தான் செல்கின்றன. பகல் நேரத்தில் ரெயில் போக்குவரத்து இல்லை. மானாமதுரை வரும் கம்பன் எக்ஸ்பிரஸ் ரெயிலை இராமேஸ்வரம் வரையில் விட்டால் பகல் காலங்களில் மக்கள் ரெயில் பயணம் செய்ய வசதியாக இருக்கும். ஆகவே, ரெயில் பயண இட நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, கம்பன் எக்ஸ்பிரசை இராமேஸ்வரம் வரையில் விட மாநில அரசு மீண்டும் ஒரு முறை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, கம்பன் ரெயிலும், இராமேஸ்வரம் விரைவு வண்டியும் சென்னையிலிருந்து புறப்பட்டுச் செல்வதும், அதைப் போல அங்கேயிருந்து திரும்பி வருவதும், இந்த இரண்டு ரெயில்களுக்கும் உள்ள இயக்க இடைப்பட்ட காலம் மிகக் குறுகிய காலமாகும். எனவே, இந்தக் குறுகிய கால இடைவெளிக்குள் மேலும் நாம் அதை நீட்டிப்பு செய்வதால் போதுமான பயணிகள் கிடைப்பார்களா என்ற சந்தேகம் இருக்கிறது. எனவேதான், தற்போதைய சூழ்நிலையில் அந்தக் கம்பன் ரெயிலை நீட்டிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று ரெயில்வே துறையும் கருதுகிற காரணத்தால் மத்திய அரசை இது சம்பந்தமாக வற்புறுத்த வேண்டிய அவசியம் இல்லையென்றும் அரசாங்கம் கருதுகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் சேது எக்ஸ்பிரஸ் புகை வண்டிக்கு ஆயிரக் கணக்கில் பயணிகள் டிக்கட் கிடைக்காமல் அலைய வேண்டிய சூழ்நிலை இன்றைக்கும் இருந்து வருகிறது. ஆகவே, பயணிகள் இட நெருக்கடி காரணமாக மிகவும் அல்லல்படுகிறார்கள். பகல் காலத்தில் இராமேஸ்வரத்திலிருந்து சென்னை வருவதற்கு ஒரு வண்டியும் இல்லை. உதாரணமாக மதுரையை எடுத்துக் கொண்டால் மதுரையிலிருந்து வைகை எக்ஸ்பிரஸ் பகலில், வருகிறது, பாண்டியன் எக்ஸ்பிரஸ் இரயில் வருகிறது. ஆகவே, கிழக்கு இராமநாதபுரத்திலிருந்து சென்னை வருவதற்கு பகல் காலங்களில் விசேஷ பஸ்கள் கூட ஒன்றும் இல்லை. அதை கருத்திற் கொண்டு இராமேஸ்வரத்திலே இருந்து சென்னைக்குப் பகல் காலத்தில் பயணம் செய்ய வேறு ஏதாவது ரெயில் போக்குவரத்து ஆரம்பிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.